# பதினோராம் வகுப்பு பொருளியல்
# முழு ஆண்டு தேர்வு-2024
# விடை குறிப்புகள்

## பகுதி அ

I. பொருத்தமான விடையை தெரிவு செய்யவும். 20 X 1 = 20.

| வினா எண் | விடைகள் | வினா எண் | விடைகள் |
|---|---|---|---|
| A TYPE | | | |
| 1 | இ– ஒருமுனை வரி, அடுக்கு விளைவுகள் அற்றது | 11 | இ – 2015 |
| 2 | ஈ–நேர்கோட்டை | 12 | ஈ–2002–2007 |
| 3 | ஈ–முற்றுரிமை | 13 | அ–துண்டுக் கூலி |
| 4 | ஈ–1200 | 14 | ஆ– மூன்றாம் |
| 5 | அ.AR | 15 | அ. ராபின்ஸ் |
| 6 | ஈ–உற்பத்தி சார்பு | 16 | அ. 1–(iii), 2–(i), 3–(iv), 4–(ii) |
| 7 | இ– மார்ஷல் | 17 | ஆ–1998 |
| 8 | ஆ–நிதி ஆயோக் | 18 | ஈ– ஏழு |
| 9 | ஈ திட்ட | 19 | இ –TP / N |
| 10 | ஈ–உச்சமான | 20 | அ. ஆல்ஃபிரட் மார்ஷல் |
| B TYPE | | | |
| 1 | அ–துண்டுக் கூலி | 11 | ஈ திட்ட |
| 2 | இ – 2015 | 12 | ஈ–நேர்கோட்டை |
| 3 | ஆ–நிதி ஆயோக் | 13 | அ. 1–(iii), 2–(i), 3–(iv), 4–(ii) |
| 4 | அ. ஆல்ஃபிரட் மார்ஷல் | 14 | அ. ராபின்ஸ் |
| 5 | ஈ–உற்பத்தி சார்பு | 15 | ஈ–முற்றுரிமை |
| 6 | இ– ஒருமுனை வரி, அடுக்கு விளைவுகள் அற்றது | 16 | ஈ– ஏழு |
| 7 | ஈ–1200 | 17 | அ.AR |
| 8 | இ– மார்ஷல் | 18 | இ –TP / N |
| 9 | ஈ–2002–2007 | 19 | ஆ–1998 |
| 10 | ஆ– மூன்றாம் | 20 | ஈ–உச்சமான |

## பகுதி ஆ

II. எவையேனும் 7 வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை அளிக்கவும் வினா எண் 30 கட்டாயம் விடை அளிக்கவும் . 7 x 2 = 14

| வினா எண் | விடைகள் | மதிப் பெண்கள் |
|---|---|---|
| 21 | உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக? | 2 |



Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com


| | | |
|---|---|---|
| | உற்பத்திக் காரணிகள் என்பது நிலம், உழைப்பு, மூலதனம்,மற்றும் அமைப்பு ஆகும்.<br>நிலம் மற்றும் உழைப்பு என்பது முதன்மை உற்பத்திக் காரணிகளாகும்.,<br>மூலதனம், மற்றும் அமைப்பு. என்பது இரண்டாம் நிலை உற்பத்திக் காரணிகளாகும். | |
| 22 | **பகிர்வு என்றால் என்ன?**<br>நான்கு உற்பத்திக் காரணிகளுக்கு வருவாயை பகிர்ந்தளிப்பதை பகிர்வு என்கிறோம்.<br>நிலம்--வாரம் உழைப்பு--கூலி மூலதனம்---வட்டி<br>அமைப்பு--இலாபம் | 2 |
| 23 | **மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வரையறு.**<br>மாநிலத்தில் ஓராண்டுக்கு உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு ஆகும் | 2 |
| 24 | **இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பினைக்கூறு**.<br>1. இந்தியப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். இதன் பொருள் தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து சீரியமுறையில் செயல்படுவது. | 2 |
| 25 | **LPG கொள்கையை செயல்படுத்த காரணம் என்ன?**<br>புதிய பொருளாதாரக் கொள்கைகளை **செயல்படுத்த LPG** அவசியமாயிற்று. | 2 |
| 26 | ***வெளிப்படையான செலவுகள் என்றால் என்ன?***<br>உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கும் ஊதியங்கள் வெளியுறுச் செலவு. எனஅழைக்கப்படும். எ.கா.மூலப்பொருள் செலவு, கூலி ம்ற்றும் சம்பளம் | 2 |
| 27 | **மனித வளர்ச்சிக் குறியீட்டெண்ணைக் கணக்கிடஉதவும் குறியீடுகளை கூறுக.**<br>. மனித வளர்ச்சிக் குறியீட்டெண்ணை, 1. வாழ்நாள் குறியீடு, 2. கல்விக் குறியீடு மற்றும் 3) வாழ்க்கைத்தர குறியீடு, கொண்டு கணக்கிடப்படுகிறது. | 2 |
| 28 | **விருப்பங்களை வகைப்படுத்துக.**<br>இன்றியமையாத விருப்பங்கள்,---உணவு உடை இருப்பிடம்.<br>வசதிக்கான விருப்பங்கள்,---மின்விசிறி, தொலைக்காட்சிப் பெட்டி.<br>ஆடம்பரத்திற்கான விருப்பங்கள்,---நகைகள், வைரம். | 2 |
| 29 | ***நுண்ணியல் பொருளியலை வரையறுக்கவும்***<br>நுண்ணியல்பொருளாதாரம்தனி பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள், தனிக் குடும்பங்கள்பற்றி ஆராய்கிறது. | 2 |
| 30 | ***போட்டியின் அடிப்படையில் அங்காடியை வகைப்படுத்துக***<br>*1.. நிறைவு போட்டி அங்காடி 2. நிறைகுறை போட்டி அங்காடி*<br>*இதில் முற்றுரிமை அங்காடி -முற்றுரிமை போட்டி அங்காடி*<br>*இருவர் முற்றுரிமை- சில்லோர் முற்றுரிமை* | 2 |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

# பகுதி –இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடை அளிக்கவும் .**
**வினா எண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும் .** **7 x 3 = 21**

| வினா எண் | விடைகள் | மதிப் பெண் கள் |
|---|---|---|
| 31 | நீண்டகாலத்தில் அனைத்து உற்பத்தி காரணிகளும் மாறக்கூடியவை.<br><br>நீண்டகால உற்பத்திக்கும் நீண்டகால உற்பத்திச் செலவிற்கும் இடையே உள்ள தொடர்பை நீண்டகால சராசரிச் செலவு வளைக்கோடு விளக்குகிறது.<br><br>நீண்டகால சராசரி செலவு வளைகோடு, குறுகியகால செலவுகோடுகளின் மிகத்தாழ்வான புள்ளிகளை ஒருங்கிணைத்து அமைந்துள்ளது. எனவே நீண்டகால சராசரி செலவுக்கோடு. இது திட்டவளைகோடு என்றும் அழைக்கப்படும்.<br><br>LAC --என்பது நீண்டகால சராசரி செலவுக்கோடு. SAC-- --என்பது குறுகியகால செலவுகோடு OM அளவு உற்பத்திக்கு நீண்டகால உற்பத்திச் செலவானது குறைந்தபட்ச அளவாக இருக்கும்.. | |
| 32 | **வாரம் மற்றும் போலி வாரம் வேறுபடுத்துக.**<br>வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு<br>கொடுப்பதேயாகும்.--ரிக்கார்டோ.<br>இயந்திரங்களிலிருந்தும் உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட கருவிகளி லிருந்தும் பெறப்படும் வருமானமே போலி வாரம் எனப்படும் என்று மார்ஷல் கூறுகின்றார். | |
| 33 | **கிராமசர்வோதயம் – சிறுகுறிப்பு வரைக.**<br>**"உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களிலோ புறநகரங்களிலோ இல்லை கிராமங்களில் தான்" என்று சொன்ன காந்தியடிகள் கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்.** | |
| 34 | **SHG யின் பண்புகளைக் கூறுக.**<br>1. சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்கள்.<br>2. பெரும்பாலான சுயஉதவிக் குழுக்கள் 10 முதல் 20 பெண் உறுப்பினர்களைக் கொண்டவை.<br>3. சுயஉதவிக் குழுக்கள் தமக்கென்று வடிவமைக்கப்பட்டச் சட்டங்களையும், விதிமுறைகளையும் கொண்டுள்ளன.<br>4. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதுடன் தங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்கின்றனர். | |
| 35 | **பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?**<br>1. பயன்பாடு உளவியல் சார்ந்தது. இது நுகர்வோரின் மனநிலையைப் பொருத்தது<br>2. பயன்பாடு மனித விருப்பத்தைச் சார்ந்தது. | |

**V.G.P CHANDRAN SIVAKASI VNRDt.,**

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



| | | |
|---|---|---|
| | 3. பயன்பாட்டை அளவிடமுடியாது. | |
| 36 | **நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?**<br>1. நிலம் இயற்கையின் கொடை ஆகும் 2. இதன் அளிப்பு நிலையானது.<br>3. நிலம் அழிவில்லாதது. 4. நிலம் அசைவற்றது.<br>5. நிலம் செழிப்புத்தன்மை மற்றும் இடவமைப்புகளில் மாறுபடும் தன்மையுடையது. | |
| 37 | ** சமநோக்கு வலை கோடுகளின் பண்புகள் யாவை*<br>இரு பண்டங்களின் வெவ்வேறு அளவுகளின் ஒருமித்த நுகர்வில் சம அளவு நிறைவைத்தரும் புள்ளிகளின் குவியிடமே சமநோக்கு வளைகோடு எனப்படும்<br>**1.. சமநோக்கு வளைவோடு கீழ்நோக்கி சரியும் தன்மை கொண்டவை**<br>**2. சமநோக்கு வளை கோடுகள் தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.**<br>**3. சமநோக்கு வளை கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது**<br>**4. சமநோக்கு வளை கோடுகள் X– அச்சயோ Y– அச்சயோ தொடாது** | |
| 38 | **விற்பனை செலவு என்றால் என்ன எடுத்துக்காட்டு தருக**<br>விற்பனை செலவு என்பது ஒரு பொருளை விற்பனை செய்வதற்காக ஒரு நிறுவனம் செலவிடும் அனைத்து செலவுகளையும் குறிக்கிறது. இது பொருளின் உற்பத்தி செலவு, விளம்பர செலவு, விற்பனை செலவு, விநியோக செலவு, மற்றும் வாடிக்கையாளர் சேவை செலவு போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது. | |
| 39 | **தமிழ்நாட்டின் கனிம வளங்கள்- குறிப்பு வரைக**<br>1. டைட்டானியம், லிக்னைட், கிரானைட், பாக்சைட், கிராபைட், லைம்ஸ்டோன் போன்றசுரங்கத் திட்டங்கள்தமிழகத்தில் உள்ளன.<br>2. இவற்றில் முன்னோடித் திட்டமாக நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தை குறிப்பிடலாம் **(NLC )**<br>3. இதன் வளர்ச்சியினால் அனல் மின்நிலையம், உரத் தொழிற்சாலை, கார்பன் சார்ந்த தொழில்கள் வளர்ந்து வருகின்றன.<br>4. மாலிப்டினம் எனும் இரசாயனத்தாது இந்தியாவிலேயே மதுரை மாவட்டத்தில் உள்ள கரடிக்குட்டம் என்னும் ஊரில் மட்டுமே கிடைக்கிறது | |
| 40 | இருமுக முற்றுரிமை என்றால் என்ன?<br>இருமுக முற்றுரிமை எனும் அங்காடியில் ஒரு உற்பத்தியாளர்(முற்றுரிமையாளர்) மற்றும் ஒரு வாங்குபவர் (வாங்கும் முற்றுரிமையாளர்) மட்டும் இருப்பர். | |



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com


## பகுதி -ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.**
**7 x 5 = 35.**

| வினா எண் | விடைகள் | மதிப் பெண்கள் |
|---|---|---|
| 41அ | **சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.**<br>1. சிலபெரிய நிறுவனங்கள்<br>2. நிறுவனங்களுக்குள் சார்ந்திருத்தல்<br>3. குழுச்செயல்பாடு:<br>4. விளம்பரச்செலவு.<br>5. பண்டத்தின் தன்மை<br>6. மாறாதவிலை | |
| 41 ஆ | **குறுகியகால செலவுக் கோடுகளை தகுந்த படத்துடன் விவரி?**<br>**மொத்தச் செலவு (TC)**<br>மொத்தச் செலவு என்பது மொத்த மாறாச் செலவையும் மொத்த மாறும் செலவையும் கூட்டிய மொத்த தொகையாகும்.<br>TC = TFC + TVC<br><br>சராசரி செலவு AC =TC/Q<br>ATC = AC= AFC + AVC<br>இறுதிநிலைச்செலவு -$MC_n$ = $TC_n$-$TC_{n-1}$<br>செலவுக்கோடுகள் U வடிவத்தில் இருக்கும். AC கோட்டின் மிகத்தாழ்வான புள்ளியை MC கோடு வெட்டிச்செல்லும்.<br> | |
| 42அ | **வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதற்கான காரணங்களை குறிப்பிடுக.**<br>1. சமூக நலத்தை அடைவதே முதன்மையான நோக்கம்<br>2. வேளாண்மை, சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில் விரிவுபடுத்துவதற்கும் நிதி தேவைப்பட்டது.<br>3.தனியார் முற்றுரிமையைக் கட்டுப்படுத்த.<br>4. வங்கிகள் இலகுவாகக் கடன் அளிப்பதற்கும் பேருதவியாக இருந்தன<br>5. வருமான ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்த உதவுகின்றன<br>6. கிராமபுற மக்களிடை**ய வங்கி** செயல்பாடுகளை ஊக்குவித்தல்.<br>**7.** கிராமபுற மற்றும் நகர்புறஙகளில் பல புதிய வஙகிக்கிளைகள் தொடங்கப்பட்டன.<br>8. வேளாண்துறை மற்றும் அதைச் சார்ந்த பிற துறைகளுக்கு தேவையான கடன்களை வங்கிகள் கொடுக்க ஆரம்பித்தன. | |
| 42 ஆ | **2015 –2020 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி இறக்குமதி கொள்கையின் சிறப்பு இயல்புகளை விளக்குக**<br>**சிறப்பம்சங்கள்:** | |


**V.G.P CHANDRAN SIVAKASI VNRDt.,**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | 1. ஏற்றுமதி உதவிகளை 25 சதவீத அளவு குறைக்கவும், இந்தியப் பொருட்களை<br>ஊக்குவிக்கவும் "இந்திய தயாரிப்பு" என்ற கருத்த<br>உருவாக்கப்பட்டது.<br>2. டிஜிட்டல் இந்தியா முறைப்படி, வரித்தாக்கல், முத்திரைத்தாள் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றிற்கான கைபேசி செயலி தயாரிக்கப்படுகின்றது<br>3. ஏற்றுமதியாளர் / இறக்குமதியாளர் சுயவிவர ஆவணங்களின் அசல் நகல்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை<br>4. பாதுகாப்பு, இராணுவக் கிடங்கு, விண்வெளி மற்றும் அணுசக்தி போன்றவை தொடர்பான ஏற்றுமதிக் கோரிக்கைகளுக்கு கால அளவு 24 மாதங்களாகும்<br>5. தற்போ து உலக வர்த்தகத்தில் 3% மாக இருக்கிற இந்தியாவின் பங்கை 2020–க்குள்,<br>இரு மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | |
| **43அ** | **பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக.**<br>**பகுத்தாய்தலின் படிகள்**<br>பகுத்தாய்தல் என்பது பொது கருத்தில் இருந்து தனிப்பட்ட கருத்தை உருவாக்குவது ஆகும்.<br>1.பிரச்சனைகள் தெளிவாக அறிந்திருக்கவேண்டும்.<br>2. அனுமானம் சுருக்கமாக இருக்கவேண்டும்.<br>3. அனுமானத்தின் அடிப்படையில் கருதுகோளை உருவாக்கவேண்டும்<br>4. கருதுகோளை சரிபார்த்தல்.<br>**தொகுத்தாய்த லின் படிகள்**<br>இம் முறை தனிக் கருத்திலிருந்து பொதுக் கருத்தைப் பெறுவதாகும்.<br>1. புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் 2. உற்றுநோக்குதல்<br>3. விவரங்களை பொதுமைப்படுத்தி கருதுகோளை உருவாக்க வேண்டும்<br>4. கருதுகோளை சரிபார்த்தல். | |
| **43 ஆ** | **. மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக.**<br>மாறும் விளைவு விதி<br>உற்பத்தியில் மூன்று விதமான விளவுகள். அவை<br>1. வளர்ந்து செல் விளைவு விதி 2. குறைந்த செல்விளைவு விதி<br>3. எதர்கனிய உற்பத்தி<br>**1. வளர்ந்து செல் விளைவு விதி :-** நிலை1<br>TP,AP, MP அதிகரிக்கிறது<br>AP வெற்றியை விடMP அதிகமாக அதிகரிக்கிறது<br><br>**2. குறைந்த செல்விளைவு விதி :-** நிலை 2<br>MP = 0 TP =உச்சமாக இருக்கும் AP = குறைந்து செல்லம்<br>**3. எதர்கனிய உற்பத்தி:-** நிலை 3 | |

**V.G.P CHANDRAN SIVAKASI VNRDt.,**


Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | MP = எதிர்மறை ஆக இருக்கும்.<br>TP & AP =குறையும். | |
| **44அ** | **தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை ?**<br>**அளவிடும் முறைகள்**<br>**1.**விழுக்காட்டுமுறை **2.**புள்ளிமுறை 3. மொத்தச்செலவுமுறை:-<br><br>**1.விழுக்காட்டுமுறை:-**தேவை மாற்ற விழுக்காட்டை விலை மாற்ற விழுக்காட்டால் வகுக்கவேண்டும்.<br>அரிசியின் விலை10%அதிகரிக்கும் போது அரிசியின் தேவை 15%குறைந்தால் அது தேவை நெகிழ்ச்சி உடையதாக இருக்கும்.<br>விலைத் தேவை நெகிழ்ச்சி=15/10=1.5<br>**2.புள்ளிமுறை:-**தேவைக் கோட்டின் மீது ஒரு குறிப்பிட்ட புள்ளியில் விலைத்தேவை நெகிழ்ச்சியை அளவிடலாம்.<br>விலைத்தேவை நெகிழ்ச்சி = <u>தேவைக்கோட்டின் கீழ் பகுதி</u><br>தேவைக்கோட்டின் மேல்பகுதி<br>3. மொத்தச்செலவுமுறை:-<br>1. ஒரு பண்டத்தின் விலை குறையும்போது நுகர்வோரின் மொத்தச்செலவு அதிகரித்தால் அது மிகைத் தேவை நெகிழ்ச்சி எனப்படும்.<br>2. ஒரு பண்டத்தின் விலை குறையும்போது நுகர்வோரின் மொத்தச்செலவு குறைந்தால் அது குறைத் தேவை நெகிழ்ச்சி எனப்படும்.<br>3. ஒரு பண்டத்தின் விலை குறையும்போது நுகர்வோரின் மொத்தச் செலவில் மாற்றம் இல்லை எனில் அது அலகுத் தேவை நெகிழ்ச்சி. எனப்படும். இதை தேவை நெகிழ்ச்சி பட்டியல் விளக்குகிறது | |
| **44 ஆ** | **கடன் நிதி வட்டிக் கோட்பாட்டினை விவரி?**<br>தொன்மை வட்டிக்கோட்பாட்டைவிட, கடன் நிதிவட்டிக் கோட்பாட்டின் எல்லை மிக விரிவானது ஆகும்.<br>**விளக்கம்.**<br>வட்டி என்பது முதலீட்டையும் சேமிப்பையும் சார்ந்தது என்று தொன்மைக் கோட்பாடு கருதுகிறது.<br>கடன் நிதி வட்டிக்கோட்பாடு வட்டி வீதமானது நான்கு மாறிகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.<br>r=f(L,I,S,M) . வட்டிவீதம் தீர்மானிப்பதை வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.<br><br><br>**வரைபட விளக்கம்.**<br>1. I+L-என்பது கடன்நிதித் **தேவையைக்** குறிக்கும்..<br>2. S+M-என்பது கடன்நிதி **அளிப்பைக்** குறிக்கும்.<br>3. கடன்நிதி வட்டிக்கோட்பாட்டின்படி I+L வளைகோடும் S+M வளைகோடும் E என்ற புள்ளியில் சமநிலை அடைகிறது. அப்பொழுது வட்டிவீதமானது r தீர்மானிக்கப்படுகிறது. | |
| **45அ** | ***பி.*ஆர் அம்பேத்கர் அவர்களுடைய முக்கிய பொருளாதார கருத்துக்களை விளக்குக**<br>டாக்டர் பி ஆர் அம்பேத்கர் அவர்களுடைய முக்கியமான பொருளாதார கருத்துக்கள் பின்வருமாறு<br>1.. நிதி பொருளாதாரம்<br>2. வேளாண்மை பொருளாதாரம் | |

Padasalai.Net



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | **3. சமூக நீதிப் பொருளாதாரம் மற்றும்**<br>**4. சமதர்ம பொருளாதாரம்** | |
| **45 ஆ** | **ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.**<br>**இலக்கணம் :-** வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதேயாகும்.<br><br><br>**விளக்கம்** :- ரிக்கார்டோ வாரக்கோட்பாட்டை குடியேற்றத்தின் மூலம் விளக்குகிறார்.<br>1. மக்கள் புதிய இடத்தில் குடியேறும் பொழுது முதலில் செழுமையான நல்ல நிலத்தையே பயிர் செய்வர்.<br>2. அதிக மக்கள் குடியேறும் போது இரண்டாம் தர நிலத்தை அவர்கள் பயிர் செய்வர்.இந்நிலையில் முதல் தர நிலம் வாரத்தைப் பெறும்.<br>3. மக்கள்தொகை அதிகரிப்பதால், மூன்றாம் தர நிலமும் பயிர் செய்யப்படும். அப்பொழுது இரண்டாம் தர நிலம் வாரத்தைப் பெறும்.மேலும் முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும்.<br>4. மூன்றாம் தர நிலம் வாரமில்லா நிலம் இதை வரைபடம் விளக்குகிறது. | |
| **46அ** | **ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.**<br>**1. விவசாயிகளின் ஏழ்மைநிலை.**<br>**2. பருவமழை பொய்த்தல்.**<br>**3. வழக்குகள்**<br>**4. அதிக வட்டிவீதம்.** | |
| **46 ஆ** | **தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி**<br>1. மின்னாற்றலை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு பிறதென் மாநிலங்களை விட முன்னணியில் உள்ளது.<br>2.கல்பாக்கம், கூடங்குளம் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அணுமின் நிலையங்களாகும்<br>3. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் வெப்ப ஆற்றல் மேட்டூர், நெய்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலிருந்து பெறப்படுகிறது<br>4. அனல்மின் உற்பத்தியில், தமிழ்நாடு தேசிய உற்பத்தியில் 34% க்கும் மேலாக உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கிறது.<br>5. தமிழ்நாட்டில் 20-க்கு மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளது.<br>6. தமிழ்நாடு சூரிய மின் உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலமாக விளங்குகிறது.<br>7. இந்திய அளவில் தமிழ்நாடு அதிகளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பைக் கொண்ட மாநிலமாக உள்ளது.<br>8. காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஏதுவான இடமாக திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்கள் உள்ளன. | |

**V.G.P CHANDRAN SIVAKASI VNRDt.,**

Padasalai.Net

| | | |
|---|---|---|
| 47அ | **(i) கணித முறையின் பொருளாதாரப் பயன்பாடுகளை விளக்குக.**<br>1. பொருளியல் பிரச்சனைகளை சுருக்கமான வடிவில் வழங்க உதவுகிறது.<br>2. பொருளியல் கருத்துக்களை சுருக்கமாக விளக்கிட உதவுகிறது.<br>3. பொருளியல் ஆய்வு முறைகளில் அதிகம் பயன்படுகிறது.<br>4. அரசு செயல்படுத்தும் பொருளாதார நடவடிக்கைகளின் விளைவுகளை அளவிட உதவுகிறது.<br>**(ii) ஊரக வீட்டுவசதி பிரச்சனைக்கான காரணங்களில் ஏதேனும் இரண்டுகூறு.**<br>1. குடிநீர்வசதி, 2. நல்லசுகாதாரவசதி, 3.முறைப்படி கழிவுகளை அப்புறப்படுத்தும் வழிவகைகள். | |
| 47 ஆ | | |

*கொடுக்கப்பட்ட சமன்பாட்டின் அணி வடிவம் பின்வருமாறு*

$$\begin{bmatrix} 7 & -1 & -1 \\ 10 & -2 & 1 \\ 6 & 3 & -2 \end{bmatrix}\begin{bmatrix} x_1 \\ x_2 \\ x_3 \end{bmatrix} = \begin{bmatrix} 0 \\ 8 \\ 7 \end{bmatrix}$$

$$\Delta = \begin{vmatrix} 7 & -1 & -1 \\ 10 & -2 & +1 \\ 6 & 3 & -2 \end{vmatrix}$$

$= 7(4-3)-(-1)(-20-6)+(-1)(30+12)$

$= 7(1) + 1(-26) - 1(42)$

$= 7 - 26 - 42 = -61$

$$\Delta x_1 = = \begin{vmatrix} 0 & -1 & -1 \\ 8 & -2 & 1 \\ 7 & 3 & -2 \end{vmatrix}$$

$= 0(4-3)-(-1)(-16-7) + (-1)(24+14)$

$= 0 + 1(-23) - 1(38)$

$= -23 - 38 = -61$

$$\Delta x_2 = = \begin{vmatrix} 7 & 0 & -1 \\ 10 & 8 & 1 \\ 6 & 7 & -2 \end{vmatrix}$$

$= 7(-16-7)-0(-20-6)+(-1)(70-48)$

$= 7(-23) + 0 - 1(22)$

$= -161 - 22 = -183$

...

$$\Delta x_3 = = \begin{vmatrix} 7 & -1 & 0 \\ 10 & -2 & 8 \\ 6 & 3 & 7 \end{vmatrix}$$

$= 7(-14-24) - (-1)(70-48) + 0(30+12)$

$= 7(-38) + 1(22) + 0$

$= -266 + 22 = -244$

$$x_1 = \frac{\Delta x_1}{\Delta} = \frac{-61}{-61} = 1$$

$$x_2 = \frac{\Delta x_2}{\Delta} = \frac{-183}{-61} = 3$$

$$x_3 = \frac{\Delta x_3}{\Delta} = \frac{-244}{-61} = 4$$



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com